**05.02.2026** **<u>அசல் வழக்கு எண்.370/1998</u>** **Starting Time : 1.18 p.m.**
**<u>பி.வா.சா.2</u>** **திரு. வாசுதேவன் த/பெ. கண்ணன்.**
**<u>சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1**). நான் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் வல்லம் கிராமத்தை சேர்ந்தவர். இந்த வழக்கின் வாதி, பிரதிவாதியை தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதி எனக்கு உறவினரா என்றால் இல்லை, என் ஊர்க்காரர் ஆவார். எதற்காக வழக்கு போட்டுள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கின் பிரதிவாதி பெருமாள் எந்த வருடம் யாரிடமிருந்து சொத்து வாங்கினார் என்றால் 1985ல் மாரியப்பன், அங்கு என்பவர்களிடமிருந்து வாங்கினார். எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 16 அடி அகலம் அதில் 3 அடி சந்து விட்டு வீடு கட்டியுள்ளார். மேற்படி விஸ்தீரணம் உள்ள சொத்தினை மாரியப்பன் மற்றும் அங்கு அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான்.

**2**). இந்த வழக்கின் வாதி கண்ணப்ப பண்டிதர் எப்போது சொத்து வாங்கினார் என்றும், அதன் விஸ்தீரணம் எவ்வளவு என்று தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கண்ணப்ப பண்டிதர் பிரதிவாதி வீடு கட்டுவதற்கு முன்பே கட்டிவிட்டார் என்றால் இல்லை, பிரதிவாதி வீடு கட்டிய பின்பு தான் கட்டினார். பிரதிவாதி வீடு கட்டுவதற்கு முன்பே வாதி வீடு கட்டிவிட்டார் என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி அவருக்கு வாரிசு வழியாக வந்த சொத்தை தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். வாதியின் மூதாதையர் 1931லேயே சொத்து வாங்கிவிட்டார்கள் என்றும், பிரதிவாதி 1985ல் வாங்கினார் என்றால் சரிதான்.

**3**). எனது பிரமாண வாக்குமூலத்தில் 3 அடி சந்து வழியில் ஆடு, மாடுகள் போய் வர வாய்ப்பு உள்ளது என்று குறிப்பிட்டுள்ளபட்சத்தில், மாடுகள் போய் வர வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. வாதி பிரதிவாதி கிரயம் பெறுவதற்கு முன்பே சொத்துக்களை அனுபவித்து வந்தார் என்றும், 5 அடி அகல சந்து விட்டு அதன் வழியாக வாதியின் வீட்டிற்கு பின்பக்கம் சென்று வர வழி விட்டிருந்தார் என்றால் சரியல்ல. வாதி கிரயம் பெற்ற பிறகு தான் பிரதிவாதி சொத்துக்களை கிரயம் பெற்று வாதியின் இடத்தையும் சேர்த்து ஆக்ரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளார் என்றால் தவறு.

**4**). நீதிமன்ற உத்தரவின் மூலம் நீதிமன்ற ஆணையர் மற்றும் வருவாய் துறை அலுவலர்கள் தாவா இடத்திற்கு வந்து அளவீடு செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு பற்றிய விவரம் எனக்கு தெரியாது என்றும், பிரதிவாதி எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, எனக்கு தெரிந்ததை தான் நான் சொல்கிறேன். எனது சாட்சியம் முன்னுக்குபின் முரணாக உள்ளது என்றும், அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லிருந்த சங்கதிகளும், தற்போது நான் அளித்துள்ள சாட்சியமும் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. என்னை சாட்சியமளிக்க பிரதிவாதி தான் நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u> - இல்லை.**

**Ending time : 1.33 p.m.**

Taken down by me in Open court read over to the witness in the presence of the Plaintiff/Defendant and admitted by him/her to be correct.

Sd/-C. Mahalakshmi,
District Munsif,
Vandavasi.